www.padippakam.com

# ஈழதாசன்

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்

திருவள்ளுவர் ஆண்டு 2040 • இதழ் எண் : 171 • விலை ரூ.5/-
வைகாசி (மே) 2009

## தமிழ் மொழி இலக்கியவாதி !
## தமிழ் இன இலட்சியவாதி !

| கட்டணம் | |
|---|---|
| ஆண்டுக்கு | ரூ.60 |
| வாழ்நாளுக்கு | ரூ.600 |
| புரவலர் | ரூ.1000 |



**இனியா**
குறுஞ்செய்தி இதழ்
தொடர்புக்கு
0091-
94 42 77 68 68

கவிஞர்
**வேலணையூர் பொன்னண்ணா**
சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவை,
டென்மார்க்.

கவிஞர் வேலணையூர் **பொன்னண்ணா** பவள விழாச் சிறப்பிதழ்

படிப்பகம்

www.padippakam.com


புத்தம் புதிய
பிரெஞ்சு மொழிப் பேரகராதி
**H. நாகராஜன் M.A.,**
எழுதி வழங்கும்

# பிரெஞ்சு - தமிழ் அகராதி

**DICTIONNAIRE FRANCAIS MODERNE**
தற்கால பிரெஞ்சு மொழி அகராதி



## அகராதியின் சிறப்பு அம்சங்கள் :

- சர்வதேசத் தரத்திலான தயாரிப்பு
- 25,000 தலைச் சொற்கள்
- 15,000-க்கு மேற்பட்ட சொற்றொடர்கள்
- பல்லாயிரக்கணக்கான எடுத்துக்காட்டு வாக்கியங்கள்
- பிரெஞ்சு மொழி இலக்கணக் குறிப்புகள்
- முழுக்க முழுக்கக் கணினியின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது.
- முற்றிலும் புதுமையான, பூரணமான ஒரு அகராதி. பிரெஞ்சு கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் வேண்டிய பயனுள்ள பல தகவல்கள்.
- உலகின் தலைசிறந்த அகராதிகளின் அமைப்பை அடியொற்றித் தயாரிக்கப்பட்ட தரமான அகராதி.
- பிரெஞ்சு மொழியைக் கற்க விரும்புவோரிடம் அவசியம் இருக்க வேண்டிய கையேடு.

இப்போது பாரீஸ் நகரில் பரபரப்பான விற்பனையில்...

உலக அரங்கிலே உங்கள் வேலை வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள உதவும் இன்றியமையாத ஒரு நூல்.

பாரீஸில் அனைத்து வர்த்தக மையங்களிலும் தற்போது விற்பனைக்குக் கிடைக்கிறது.
பாரீஸ் மற்றும் பாரீஸின் புறநகர்ப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுக்கே நேரடியாக டெலிவரி செய்கிறோம்.
பிரான்ஸின் பிற நகரங்களிலும், ஏனைய ஐரோப்பிய நகரங்களிலும் வசிப்பவர்களுக்கு CHRONOPOST மூலம் அகராதியை விரைவாக அனுப்பி வைக்கிறோம்.

**தொடர்பு முகவரி :**

**H. Nagarajan, M.A.,**
60, Allée des kiosques, 94420 - Le Plessis Trévise, PARIS (East),
FRANCE . Tél:01 45 76 38 48 Cell / Portable : 0660 81 9665
E-Mail : Nagaradja50@yahoo.fr




படிப்பகம்

www.padippakam.com



டென்மார்க்கில் வாழ்ந்து தமிழ்ப்பணி, தமிழர்பணிகள் என பன்முகப்பட்ட பணிகள் செய்து டென்மார்க் தமிழரால் நன்கு அறிந்தவரும் டென்மார்க் சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவையின் தலைவரும், சமூக சேவையாளருமான

**பொன். தியாகராஜா** என்ற

கவிஞர்

**வேலணையூர் பொன்னண்ணா** அவர்கள்

பற்றிய ஒரு அறிமுகம்

இலங்கையின் தமிழர் பிரேதசத்தின் தமிழீழ வட பிரேதசமான யாழ்ப்பாணத்தின் வடக்கே உள்ள வேலணையின் கிழக்குப் பகுதியில் தவிடு தின்னி பிரதேசத்தில் பொன்னையா என்பவருக்கும் பொன்னம்மா என்பவருக்கும் இரண்டாவது புத்திரனாக 1939 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆம் திகதி அவதரித்தவர். இவர் ஆரம்பக் கல்வியை வேலணை கிழக்கு மகாவித்தியாலையத்திலும் பின் வேலணை மத்திய கல்லூரியிலும் தனது படிப்பைத் தொடர்ந்தவர். இவரின் மனைவியார் பெயர் பொன்மணி. மக்கள் ஐவர் உள்ளனர். அனைவருமே புலம் பெயர் நாடுகளிலேயே வாழ்கின்றனர்.

இவர் படிக்கும் காலத்திலேயே கிராமத்து மக்கள் பணியில் பற்று வைத்து தேவி கோட்ட சன சமூக நிலையம், நாவலர் சன சமூக நிலையம், வேலணை கிராம முன்னேற்றச் சங்கம், தீவுப் பகுதி சமூகநலச் சேவை நிலையம் போன்ற மக்கள் தொடர்பு ஸ்தாபனங்கள் ஊடாக மக்கள் பணியைத் தொடர்ந்தவர்.

அதன்பின் தொழிலின் நிமித்தம் கொழும்புக்கு வந்தவர். 1957 ஆம் அண்டு தென் தமிழீழப் பகுதியில் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கித் தவித்த மக்களின் துயரத்தையறிந்து அவர்களுக்கு உதவும் எண்ணத்தில் நிதி சேர்த்து அனுப்ப எண்ணி செயல்பட்டபோது, ஏற்பட்ட இன்னல்களை அறிந்து, அந்தக் காலத்தில் கொழும்பில் வாழ்ந்த வேலணையை பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பில் வாழ்ந்த வாலிபர்களைத் திரட்டி வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கம் என்ற அமைப்பை அங்கு வாழ்ந்த சில நண்பர்களின் உதவியுடன் உருவாக்கி பணம் சேகரித்து, உதவியதோடு தன் மக்கள் பணியை கொழும்பிலும் தொடர்ந்தார்.

மேற்படி அமைப்பின் மூலம் 1960 இல் மூன்று நாள் முத்தமிழ் விழாவை திரு.வே.அ. கந்தையா அவர்கள் அந்நாள் பா.உ. அவர்களின் தலைமையிலும் 1962 ஆம் ஆண்டு பத்தாவது திருக்குறள் மாநாட்டையும், தமிழ் மறைக் கழகத் தலைவர் கா.பொ. இரத்தினம் அவர்கள் தலைமையிலும், வேலணையில் வேலணை மக்களின் உதவியுடனும் கொழும்பு வாழ்ந்த தோழர்கள் எஸ்.பி. சாமி, வேலணை வீரசிங்கம் போன்றோரின் உதவியுடனும் செய்து முடித்தார்.

அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் பிரபலமான நடிகரான எஸ்.எஸ். கணேச பிள்ளை, புழுகர் பொன்னையா புகழ் வரணியூரான் அவர்களின் நெறியட்கையில் யாழ் கலையரங்கம் வெளியீடு செய்த சங்கிலியன் என்ற சரித்திர நாடகத்திலும் அதன்பின் "குறள் தந்த வாழ்வு" "மனிதன் மாறி விட்டான்" போன்ற நாடகங்களிலும் நடித்து அன்றைய ஊடகங்களால் பாராட்டும் பெற்றார். அந்தக் காலகட்டத்தில் 'சங்கிலியன்' நாடகத்துக்காக பிரசுரித்த ஒரு மலரில் அவர் ஒரு சிறுகதை எழுதினார். அதுவே அவரின் முதல் இலக்கியப் பயணம். அதன் பெயர் 'ஆணாக மாறிய பெண்'. இதற்கு முன்னால் இவர் இலக்கியப் பயணத்துக்குள் புகுவதற்கு ஒரு துயரச் சம்பவமே காரணம் என்று அடிக்கடி கூறுவார். அதன் விபரம் அறிவது கடினமாகவே உள்ளது.

இவர் கடந்த 1981 ஆம் ஆண்டு ஆடி மாதம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை காரணமாக வெளிநாட்டுக்கு வந்து ஆறு ஆண்டுகள் பாரீசில் வாழ்ந்து விட்டு 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் டென்மார்க்குக்கு வந்து குடும்பத்தாருடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார். இவர் இங்கு வந்த நாள் முதல் டென்மார்க்கில் அன்றைய காலத்தில் வெளிவந்த சஞ்சீவி, தாயகம், சங்கமம், கற்பகம், கரும்பு போன்ற சஞ்சிகைகளிலும், இன்று கணினி பத்திரிகையான அலைகளிலும், ஜெர்மனியில் வெளிவந்த இளைஞன், பூவரசு, மண் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

சஞ்சிகைகளிலும் பிரான்சில் ஈழநாடு முரசு, முரசம் போன்ற பத்திரிகைகளிலும், இலண்டனில் புதினம், வடலி போன்ற பத்திரிகைகளிலும் சுடரொளி சஞ்சிகையிலும் கொழும்பில் தினக்குரல், வீரகேசரி, உதயன் போன்ற பத்திரிகைகளிலும் அவ்வப்போது எழுதி வருகிறார். இவருக்கும் அன்றைய ரிரி என் ஆர்ரி இன்றைய ஜி.டிவி. தீபம் போன்ற தொலைக்காட்சிகளிலும், ஐபிசி, ஐஆர்ஐஆர் இலண்டன் சன்ரைஸ் போன்ற வானொலிகளிலும் இவரின் படைப்புகள் வெளிவருகின்றன. டென்மார்க்கில் அதிக நூல்களை வெளியீடு செய்தவரும், அனைத்து நூல்களும் வெளியீட்டு விழா செய்து விமர்சனத்தை கடந்தே மக்கள் கரங்களுக்கு எட்ட வைத்தவர் என்ற பெருமைக்குரிய ஒரு கவிஞராவார். இப்போ அவரின் பத்தாவது படைப்பாக அவரின் சுயசரிதையை எழுதிக் கொண்டு இருப்பதாக அறிய முடிகின்றது.

**Poet. Velanaiyoor PONNANNA,**
'Arivagam',
FYRRE VAENGET - NR 311,
7190 - BILLUND,
DENMARK.
TLF & FAX : 45 - 75338742,
45 - 21454621
E-mail : pon@stofanet.dk

# வாழ்த்து !

- தமிழுக்கு கவிப் பூ
  கோர்த்து
  தாய்க்கு சேய் கூறும்
  வாழ்த்து !
- பூக்களாலே மாளிகை
  கட்டிய
  புன்னகை உன்னது !
- பாக்களாலே உலகை
  வென்றிட்ட கண்ணது - உன்
  பாதம் பட்டுறையுது பனி !
  நோக்களில்லா வலி - புது
  நோக்கோடு தேக்கமில்லா
  தொடரட்டும் பணி !
- எழுபதிலும் வீர
  முழக்கத்துடன் இளமை
  துள்ளுமுந்ததெனமுத்து
  எழுது எழுதுவென
  என்னையும் சுண்டியிழுக்கிறது!
- எரிதணல் கொண்டு - பனி
  மலை குடைந்த
  பொன்னண்ணா !
- சுடுகலன் இருந்து புறப்பட்ட
  எறிகணை போலுந்தன்
  கவிதை
  எம்முணர்வுகளையும்
  சுடுவிக்கிறது !
- பகைப் புலத்தின் அவலத்தை
  புகை இலக்கிய ஓவியம் போல்
  புதுப்பாட்டில் பாடிவித்தாய்
  தாய் நிலத்தின் வளத்தை - திரை நீக்கி
  புலத்துக் குள்ளும் தெளிவித்தாய் !
- தாயினிறப்போடு
  பிறந்தவுன் கவிப்பயணம்
  தாய்மண் பிறப்பையும்
  பாடட்டும் என்றும் !
- இலக்கியப் பயணம்
  இனிதே தொடர...
  இளமைகள் மீண்டு
  இன்னும் மின்னும் தொடர...
  இனிய நல்வாழ்த்துக்கள் !

**- இணுவையூர் சக்திதாசன்,**
டென்மார்க்.

ஏழைதாசன் மலர் 17 - இதழ் 9
எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்
திருவள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி

**கட்டண விபரம்**

**உள்நாடு (அஞ்சல் வழி)**
ஆண்டுக் கட்டணம் : ரூ. 60/-
வாழ்நாள் கட்டணம் : ரூ. 600/-
புரவலர் நன்கொடை : ரூ. 1000/-

**வெளிநாடு (வான்வழி)**
ஆண்டுக் கட்டணம் : US$ 10
வாழ்நாள் கட்டணம் : US$ 100
புரவலர் நன்கொடை : US$ 200

**விளம்பரக் கட்டணம்**

**வெளிநாடு**
முழுப்பக்கம் : ரூ. 1000/-
அரைப்பக்கம் : ரூ. 500/-

**உள்நாடு**
முழுப்பக்கம் : ரூ. 500/-
அரைப்பக்கம் : ரூ. 250/-

பெயர் : EALAIDHASON
வங்கி இலக்கம் : A/c No. 478171653
முகவரி : INDIAN BANK,
PUDUKKOTTAI-622 001.
TAMIL NADU, INDIA

**அருமைத் தமிழ் நெஞ்சங்களே,**
ஏழைதாசன் மாத இதழ் தொடர்ந்து பெற கவிஞர் பொன்னண்ணா அவர்களிடம் கட்டணம் செலுத்தினால் அவர் எமக்கு அனுப்பி வைப்பார். அல்லது ஏழைதாசன் வங்கி இலக்கத்துக்கு அனுப்பலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# பொன்னண்ணா எழுதிய நூல்கள்



இவரின் முதலாவது வெளியீடாக 'நிலமாகி' என்ற கவிதைத் தொகுப்பு 1993 ஆம் ஆண்டு யூலை மாதம் டென்மார்க் பில்லூண்ட் நகரில் அன்றைய பாரீஸ் ஈழநாடு ஆசிரியர் எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் தலைமையில் நடந்த வெளியீட்டு விழாவில் வெளியீடு செய்யப்பட்டது. டென்மார்க் எழுத்தாளர்களுடன் ஜெர்மனி வண்ணாத்திப் பூச்சி ஆசிரியர் அவர்களும், அவர் மனைவியும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள்.



இரண்டாவது 'வெந்தவனம்' என்ற நூலை 1997 ஆம் ஆண்டு வோபர்ஸ்சை என்ற நகரில் அன்றைய பிரபல எழுத்தாளரும், கவிஞருமான யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருவாளர் ஆதவன் மாஸ்டர் அவர்களின் முன்னிலையில் பிரபல கதாசிரியரும் திரைப்பட நெறியாளரும் அலைகள் பத்திரிகை ஆசிரியருமான திருவாளர் கே.எஸ். துரை அவர்கள் தலைமையில் திருமதி. பொன்மணி அவர்களால் வெளியீடு செய்யப்பட்டது.



மூன்றாவது வெளியீடாக 1998 இல் டென்மார்க் அம்மன் ஆலய நிர்வாகிகளின் வேண்டுகோளுக்கமைய அன்னை அபிராமி பக்திப் பஜனைப் பாமாலை என்ற ஒரு நூலை வெளியீடு செய்து அன்பளிப்பாக வழங்க அமெரிக்கா ஹெவாய் பிரதம குரு சுப்பிரசுவாமி அவர்களால் வெளியீடு செய்யப்பட்டது. அதன் வருமானம் எல்லாம் ஆலயத்துக்கு அன்பளிப்பாக்கப்பட்டது.



நான்காவது படைப்பாக 2000 ஆம் ஆண்டில் டென்மார்க் சித்தி விநாயகர் ஆலய நிர்வாகத்தின் விருப்பத்துக்கு ஏற்ப பிள்ளையார் பக்திப் பஜனைப் பாமாலை என்ற தலைப்பில் ஆசிரியர் எழுதிய பஜனைப் பாடல்களும், இசைப் பாடல்களும் ஆலயத்துக்கு தேவையான பக்தர்கள் விரும்பிப் படிக்கும் தேவார திருவாசகங்களும் தேடித் திரட்டி பயனுள்ள பாமாலையாக ஆலயத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.



ஐந்தாவது படைப்பாக ஐரோப்பாவில் முதல் முதலாக வெளிவந்தது பச்சை இறகு என்ற ஹைக்கூ கவிதை நூலாகும். அது ஐரோப்பாவின் மக்கள் பலரால் தேடிப் படிக்கப்பட்ட கவிதை நூலாகும். மூன்று வரிக்குள் பல பெரிய ஆழமான கருத்தை வெளிக்கொணர்ந்தது. அந்த நூல் டென்மார்க்கின் பிரபல கவிஞர் முல்லையூரான் முன்னிலையில் டென்மார்க் கொப்பன்ஹாவன் பல்கலைக்கழக விவசாயப் பேராசிரியர் திருவாளர் என். சிறீஸ் கந்தராஜா அவர்கள் தலைமையில் வோபாஸ்ச பாடசாலை மண்டபத்தில் திருமதி. பொன்மணி அவர்களால் 2001 ஆம் அண்டு வெளியீடு செய்யப்பட்டது.



ஆறாவது படைப்பாக உளிகள் என்ற ஹைக்கூவை ஒத்த கவிதைகளாய் இருந்தும் இதை ஹைக்கூ என்ற ஜப்பானிய பெயரைத் தவிர்த்து சரியான தமிழ்ப் பெயராக வைத்தால் என்ன ? என்ற யோசனையை அவரின் ஐந்தாவது வெளியீடான பச்சை இறகில் விமர்சனம் செய்த விமர்சகரின் வேண்டுகோளுக்கமைய இந்த உளிகள் என்ற கவிதை நூலுக்கு மின்பாக்கள் என்ற அடைமொழியில் வெளியீடு செய்துள்ளார். இதன் வெளியீட்டுக்கு



படிப்பகம்

www.padippakam.com

ஜெர்மனியில் இருந்து சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர், செயலாளர், பொருளாளரோடு பிரபல எழுத்தாளர் திருமதி. விக்னா பாக்கியநாதன் அவர்களோடு இலண்டனில் இருந்து நூல் தேட்டத்தின் ஆசிரியர் என். செல்வராசா ஆகியோரின் முன்னிலையில் டென்மார்க் எழுத்தாளர் பலரும் கலந்து கொள்ள திருவாளர் கே.எஸ். துரை அவர்களின் தலைமையில் நூல் பொன்மணி அவர்களால் 2003 இல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.



இது பொன்னண்ணாவின் ஏழாவது வெளியீடு. இது அவரின் சொந்த கிராமமான வேலணையில் உள்ள அவரின் குல தெய்வமான பெருங்குளம் முத்துமாரி அம்மனின் பேரில் பாடல் செய்து அன்னைக்கு என் சமர்ப்பணம் என்ற நோக்கில் அம்பிகை பதிகம் என்ற நூலாய் தொகுத்து வழங்கி இலங்கையில் வேலணையில் ஆலய விழாவில் வெளியீடு செய்யப்பட்டது.



இது பொன்னண்ணாவின் பொறுப்பு வாய்ந்த எட்டாவது பெரியதொரு தொகுப்பு நூலாகும். இதற்கு அவர் இட்ட பெயர் அருளமுதம் என்பதாகும். அட்டையில் அவர் ஒரு முத்திரை பதித்து சொல்லி உள்ளார். இது ஒரு சாதாரண நூலல்ல. இது தாய் மண்ணின் சரிதம் சொல்லும் ஒரு ஆவணத் திரட்டு. அனைவர் வீட்டிலும் இருக்க வேண்டிய நூல் என்று. இதில் வேலணை கிராமத்தின் வரலாறு. அந்த மண்ணின் பெருமைக்காய் உழைத்த பிரமுகர்கள் வரலாறு. அங்குள்ள பாடசாலை களின் வரலாறு. பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வரலாறு போன்ற பல முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு அந்த முத்துமாரி அம்மன் பேரில் பல பாடல்களும், சைவ மக்கள் தெரிந்து கொள்ள அறிந்து கொள்ளத்தக்க வகையில் சைவ சமய விழுமியங்களின் விளக்கங்களோடு நல்ல பல பெரியார்களின் கட்டுரைகளையும் இணைத்து வெளியீடு செய்துள்ளார். இதன் வெளியீடு இலங்கையில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 6.7.2005 இல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மறைக்கழக தலைவருமான திருவாளர் க.பொ. இரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதில் பிரபல ஊடகவியலாளர் திருவாளர் சிவனேசச் செல்வன், திரு. கம்பபாரதி ஜெயராஜ் அவர்கள், தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகர் எஸ்.பி.சாமி அவர்கள், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் வேலணை வேணியன் போன்ற பலர் நூலுக்கு வாழ்த்துரை வழங்கினர்.




இதுதான் பொன்னண்ணாவின் ஒன்பதாவது படைப்பான நெஞ்சத்து நெருப்பு நூலாகும். இதற்கு ஒரு வரலாறே இருக்கிறதாக பொன்னண்ணா அடிக்கடி கூறுவார். இது முதன் முதலில் இலங்கை கிளிநொச்சியில் பதிப்புச் செய்து வந்து சேர முடியாத சூழ்நிலைக்குள் நூல் சிக்கி, பின் பொன்னண்ணா 2005 ஆம் ஆண்டு கொழும்பு சென்று அங்குள்ள நூலில் இரண்டு பிரதியை மட்டுமே பெரிய கஸ்டத்தின் மத்தியில் கொண்டு வந்து சேர்த்து அதை பெரும் பணச் செலவில் பரிட்சாத்தமாக 10 பிரதிகளை போட்டோ பிரதி எடுத்துப் பார்க்கையில் அந்த பிரதிகளில் தாள்கள் மாறுபட்ட நிலையில் பைண்டிங் செய்தமையால் மனம் நொந்த ஆசிரியர் மிகுதி இருந்த மறுபிரதியை தமிழகம் மணிமேகலை பிரசுரத்துக்கு அனுப்பி அங்கிருந்து புதிய பிறப்பாய் வெளிக்கொணர்ந்து 19.9.2007 இல் இலண்டனில் வெளியீடு செய்தார். இதன் வெளியீட்டு விழாவில் இலண்டன் கின்சன் மாநகர மேயர் யோகன், யோகநாதன் அவர்களின் முன்னிலையில் இலண்டனில் உள்ள பல பெரிய எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். திருவாளர் க. இராஜமனோகரன் அவர்கள் தலைமையில் நடந்த வெளியீட்டு விழாவில், திருவாளர் அமுதுப்புலவர் அவர்கள், திரு. பண்டிதர் அப்புத்துரை அவர்கள், திரு. செல்வராஜா அவர்கள், புதினம் பத்திரிகை ஆசிரியர், வடலி பத்திரிகை ஆசிரியர் போன்றோருடன் பல விமர்சகர்களின் விமர்சனத்துக்கு பின் பொன்மணி அவர்களால் நூல் வெளியீடு செய்யப்பட்டது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

இப்படி இவர் ஒன்பது நூல்களை வெளியீடு செய்ததோடு, தமிழக, உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழக உலகத் தமிழர் பேரமைப்பு, சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் - ஜெர்மனி, உலகத் தமிழர் பண்பாட்டுப் பேரவை - மலேசியா, டென்மார்க் - கலாச்சார கலையகம், சைவத் தமிழ் பண்பாட்டுப் பேரவை - டென்மார்க் போன்ற அமைப்புகளின் உறுப்பினராகவும், தலைவராகவும் உள்ளார். அதன் மூலமும் பல தமிழ்ப் பணிகளை செய்து வருகின்றார் என்பது அனைவரும் அறிந்ததே. இவர் தனது நூலை பல நாடுகளிலும், வெளியிட எண்ணி இலண்டன், கனடா, பாரீசு, ஜெர்மனி எழுத்தாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வெளியீட்டையும் நடத்தி உள்ளார் எனவும் அறிய முடிகிறது. இவர் தற்போது தனது வாழ்க்கை வரலாறு நூல் ஒன்றை "பனிமலை கடந்த பாதச் சுவடுகள்" என்ற தலைப்பில் எழுதிக் கொண்டு இருப்பதாகவும் அறிய முடிகின்றது.

❖ நன்றி : **அலைகள்** கணினி இதழ், டென்மார்க்.

## பவள விழாக் காணும் ஒரு வாலிப உள்ளம்!

எண்களால் மட்டும் அகவை எழுபதைத் தொட்டிருக்கும் எம் மார்க்கண்டேயருக்கு இந்த வாழ்த்து மடலை எழுதுவதில் மிகவும் சந்தோச மடைகிறேன்.

ஒருவரின் தோற்றம், நடை, உடை, பாவனைகளில் இருந்து அவரைப் பற்றிய மதிப்பீடுகள் எப்போதும் சரியாக அமைவதில்லை என்பதற்கு, என் அனுபவத்தில் கண்ட நல்ல உதாரணம் பொன்னண்ணா என அழைக்கப் படும் திரு. பொன். தியாகராஜா அவர்களே.

அவரைப் பார்த்த மாதிரியில் அவரை ஒரு பண்டிதர், ஒரு மேடைப் பேச்சாளர் அல்லது சைவப்பழம் என்று சொல்லத் தோன்றும். ஆனால் அவருடன் நெருங்கிப் பழகும் பொழுது அல்லது அவரின் படைப்புகளை வாசிக்கும் பொழுது அல்லது அவரின் வளர்ப்பில் வளர்ந்த அவரின் பிள்ளைகளைப் பார்க்கும் பொழுது அவர் மேல் மேலெழுந்தவாரியாக நாம் கொள்ளும் எண்ணங்கள் பொய்த்துப் போய்விடும்.

அதுதான் பொன்னண்ணாவின் சிறப்பு என்று நினைக்கின்றேன்.

அவரால் மார்கழிக் குளிரினுள் நின்று திருவெம்பாவையும் பாட முடியும் - அதே வேளை பனிக்குளிரினுள் தீபத்தை கையில் ஏந்தியபடி நாட்டு விடுதலைக்காக ஊர்வலமும் போக முடியும்.

அம்மன் கோவிலுக்காக அபிராமி பாடல்களைத் தொகுக்கவும் முடியும் - அதே வேளை நெஞ்சத்து நெருப்புகளை ஹைக்கூ கவிதைகளாக எடுத்து வீசவும் தெரியும்.

சைவப் பண்பாட்டுக் கழக தலைவராய் நின்று இளம் சந்ததிக்கு வழிகாட்டவும் முடியும்- அதே வேளை தானே ஓர் இளைஞனாக புதுச்சிந்தனைகளுடன் முன்னே போகவும் தெரியும்.

அவருக்கு இந்த வயதிலும் கணினி மீதிருக்கும் காதலை கண்டு நான் அதிசயப்பட்டிருக்கிறேன். "தம்பி... கணினியில் இதைச் செய்து தாங்கோ" எனக் கேட்டதை விட "இதை எப்படிச் செய்யலாம்" எனக் கேட்டு அதனைக் கற்றுக்கொள்ளும் திறமையைக் கண்டு வியந்ததாலேயே அவரை இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் மார்க்கண்டேயர் என அழைத்தேன்.

அடுத்தது அவருடைய தனிச்சிறப்பு எதையும் சீர்தூக்கி ஆராயும் பண்பு. அதனை நான் சொந்த வாழ்க்கையில் எத்தனையோ தடவைகள் கண்டிருக்கின்றேன். அவரால் சமயம் எது, இலக்கியம் எது, வாழ்க்கை எது தனித் தனியாக பிரித்து பார்க்கும் திறமை இருப்பதாலோ என்னவோ அவரால் அனைத்து தரத்தினருடனும் அன்பாக பழக முடிகிறது. இதனை பொன்னண் ணாவிடம் இருந்து கற்க வேண்டும் என்று பல தடவை முயற்சித்து தோற்றிருக்கின்றேன். அதனால்தானோ என்னவோ ஓர் பண்பட்ட இலக்கியவாதியாகவும், என்னை ஓர் இலக்கியச் சண்டியனாகவும் பல பேர் பார்ப்பதற்கு காரணமாய் அமைந்து விட்டது. ஆனால் அந்த இலக்கியத் தளத்தில் வயது வித்தியாசங்களைக் கடந்து, அவருடன் நண்பனாக இருப்பது என்றும் எனக்கு மகிழ்ச்சியே.

மேலும் வள்ளுவருக்கு ஒரு வாசுகி போல, செல்லத்துரை மாஸ்டரின் பூக்கள் படமாயினும் சரி, ஜீவகுமாரனின் உண்மை சுடும் நாடகம் ஆயினும் சரி, இலக்கிய சந்திப்புகள் ஆயினும் சரி... பிள்ளைகளுக்கும் ஓர் கணவனுக்கும் உற்றுதுணையாக விளங்கி அவர்களின் வாழ்க் கையில் வழிகாட்டியாக விளங்கும் அவரின் மனைவியின் பங்கும், பாங்கும் என்றும் மதிக்கத்தக்கது.

அதேபோல் அவர்களின் பிள்ளைகளையும், நாட்டிற்கும், சமூகத்திற்கும், இலக்கியத் துறைக்கும் பயன் உள்ளவர்களாக உருவாக்கி இருப்பதற்கு பொன்னண்ணாவுக்கு ஒரு ஹஹ்ஸ் ஓவ்!

நெஞ்சில் உரமும் நேர்மை திறனும் கொண்ட ஒரு இலக்கியவாதி இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமூகத்திற்கும் இலக்கியத்துக்கும் நற்பணி செய்ய ஆண்டவன் ஆரோக்கியத்தை கொடுக்க வேண்டும் என கல்லுக்குள் தேரையையும் அந்த தேரைக்கு உயிரையும் கொடுத்த ஆண்டவனை வேண்டிக் கொள்கின்றேன்.

- கவிஞர். **வி. ஜீவகுமாரன்,**
டென்மார்க்.



படிப்பகம்

www.padippakam.com

# எழுபதைக் காணும் கவிஞர் !

டென்மார்க்கில் எழுபது வயதிலும் தளராத தன்னம்பிக்கையுடன் பணியாற்றும் தமிழர் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா எழுபதாவது அகவையை தொடுவது எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

கவிதை, கட்டுரைகள், கவியரங்கம், வரலாற்று நூல்கள், திரைப்படம் நடித்தல் என்று எண்ணற்ற பணிகளில் தன்னை அடையாளம் காட்டி வருபவர் வேலணையூர் பொன்னண்ணா. தற்போது சிவசிவ என்ற அமைப்பின் தலைவராகவும் இருந்து தமிழோடு சமயமும் வளர்க்கும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்பட்டு வருகிறார்.

தமிழர் தாயகத்தில் நடைபெறும் அவலங்களை அவ்வப்போது கவி படைத்து தனது தாயக நேசத்தை வெளிப்படுத்துவதில் பொன்னண்ணாவிற்கு முன்னுரிமை உண்டு. அது மட்டுமல்லாமல் இன்று எங்கு எந்த விழாவோ உணர்வுபூர்வமான நிகழ்வுகளோ நடைபெற்றாலும் அங்கு தனது பாரியாருடன் வந்து உற்சாகப்படுத்துபவர். முன்னணி வகிப்பவர் வேலணையூர் பொன்னண்ணா.

வாழ்க்கையில் சாதிக்க ஆவல் கொண்டவர்களுக்கு வயது ஒரு தடையல்ல என்பதற்கு சான்றாக வாழ்ந்து வருபவர். வேலணையூர் பொன்னண்ணாவும் அவருடைய பாரியாரும் எங்கு நல்லது நடந்தாலும் அங்கு சென்று வாழ்த்தும் நடுவுநிலையில் இருந்து இன்று வரை வழுகி நடக்காதிருப்பதே அவர்களுக்குரிய சிறப்பான தமிழ் இயல்பாகும்.

வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருந்தால் அதை வரவேற்பதாக கூறுவது பொன்னண்ணாவின் முக்கிய தமிழ் வாசகமாகும். தமிழ் வாழவேண்டுமென நினைப்போர் தாழ்வதில்லை என்பதற்கு உதாரணமாக, பொன்னண்ணா வாழ வேண்டும். சிறப்படைய வேண்டுமென வாயார, மனதார வாழ்த்துகிறேன்.

*இன்று போல் என்றும் வாழ்க !*

*வாயுரைக்க வருவதில்லையே வாழி நின்றன் மேன்மையெல்லாம்.*

– **கி. செ. துரை,** திரைப்பட இயக்குநர், டென்மார்க்.

## வணக்கத்துக்குரிய **ஜெகத் கஸ்பார் அடிகளார்** அவர்களின் **பொன்னண்ணா** பற்றிய கருத்து !



கவிஞர் திரு. வேலணையூர் பொன்னண்ணா அவர்களை நான் நேரில் அறிமுகமானது புத்தாயிரம் ஆண்டின் விழாக்கோல நாள் ஒன்றில். நேரில் சந்தித்த சில நிமிட நேரத்தில் அவரின் கவிதைகளும் எனக்கு அறிமுகமானது. தூரத்து கிராமங்களில் தூய்மையோடு எளிமையான கம்பீரத்துடனும் மலர்ந்து மயக்குகின்ற மென்மையான ரோஜாக்களைப்போல் இருந்தன இவரது கவிதைகள். இலக்கிய வான்பரப்பின் ஒளி வட்டங்களுக்குள் வராமல் இப்படி எத்தனை கவி நிலவுகள் தமிழுலகில் இருக்கின்றன என எண்ண.... என் மனம் கனத்தது.

என் நெஞ்சில் நிலைத்து விட்ட இந்தக் கவிஞரை வாழ்த்துவதை பெருமையாக கருதுகின்றேன். கடுமை என்பது கவிஞர் பொன்னண்ணா அவர்களுடன் கதைக்கும் போது காண்பது அரிது. ஆனால் அவர்களின் கவிதைகளில் காத்திரம் அதிகம் உண்டு.

"கடவுளை நேசிப்போர்/மறக்க வேண்டியது/மதத்தை!" என்ற மூன்று வரிகளே கொண்ட அவரது கவிதை ஆளுமையின் காத்திரம் அறிய சூனியத்தில் தொடங்கி முழுமை தேடி, ஓடி மீண்டும் சூனியத்தில் முடிவதே மனித வாழ்க்கை. வாழ்வையும், மரணத்தையும் இருத்தலின் இரு பக்கங்களாக ஏற்கின்றவனே தெளிவு பெற்றவன். வாசனைத் திரவியங்களும், மினுக்குத் தூள்களும், ஜீன் விஞ்ஞானமும், அவனுக்கு அவசியமில்லை என்பதை மூன்று வரியில் உள்ளடக்குகின்றார் பொன்னண்ணா.

ஞானியாகுகின்றார் பொன்னண்ணா "புதிய தலைமுறைக்கு / இடம் விட்டுச் செல்வதே / முதியோர் மரணங்கள்!" - இந்தக் கவிதையின் மூலம்.

கவிஞன் இயல்பான மனிதனாகவும் இருக்க வேண்டும் என்பதை "காச்சி இறக்கிய சோறும் / கணவனின் கோபமும் மாற / நாளிகை சிலதான்" - இக்கவிதை மூலம் பொன்னண்ணா என்ற இயல்பான மனிதனைக் காண்கின்றேன். அத்தனை கவிதைகளிலும் புதிய பரிணாமங்கள் தெரிகின்றன. தமிழ்க் கவிதை உலகில் பொன்னண்ணாவுக்கு கட்டாயம் வரலாற்றில் இடம் உண்டு.

அவரை மகனாகப் பெற்ற தாய் - தந்தையரும், கணவனாகக் கொண்ட மனைவியும், தந்தையாகக் கொண்ட பிள்ளைகளும் பேறு பெற்றவர்களே!

– **ம. ஜெகத் கஸ்பார்,** எம்.ஏ., வேரித்தாஸ் வானொலி, தமிழ்ப்பிரிவு இயக்குநர்.



படிப்பகம்

www.padippakam.com

## பொன்னண்ணா வளங்கொண்டு. புகழ்கொண்டு. சீர்கொண்டு சிறப்போடு வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம் !

அன்பின் பொன்னண்ணா அவர்களே!

தங்களின் உள்ளம் உண்மையானது. சிந்தனையோ பரந்த நோக்கம் கொண்டது. சிறியன சிந்தியாத தன்மை கொண்டது. தமிழுக்கும், சைவத்துக்கும் தன்னாலான அரும்பணியைச் செய்து கொண்டே இருப்பது இயல்பானது.

எங்கள் சமுதாய வரலாற்றில் ஒரு கதாநாயகராய், கவிஞராய், கதாசிரியராய், கட்டுரையாளனாய், விமர்சகராய், திறனாய்வாளனாய், சிந்தனையாளராய், தரமான பேச்சாளராய், பட்டைதீட்டிய வைரமாய் தாய் மண்ணில் எழுந்தருளி உள்ள வேலணையூர் பெருங்குளத்து முத்துமாரி அம்மனின் அருளாசியின் துணை கொண்டு தான் சார்ந்த தாய்மண்ணையும், மக்களையும், தமிழ்மொழியின் சிறப்பையும், பண்பாட்டுப் பெருமையையும், மதித்து புலம் பெயர் வாழ்விலும் செயல்படுபவர்.

அவரின் அருளமுதம் தேவருக்கும் எட்டாத தேனமுதம். மக்கள் அருளமுதத்தை அள்ளிப் பருகுவோம். இவர் வாழ்க்கையில் மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் சுகம் கோடி கண்டு பல்லாண்டு பல்லாண்டு பலகோடியாண்டு வாழ்ந்து தாய்மண்ணின் நாமம் சிறக்க வாழ்க வாழ்க வென உளமார வாழ்த்துகின்றோம்.

– டாக்டர். **க. சிற்றம்பலம் குடும்பம்,**
விசக்கடி வைத்தியர், கனடா.

## வாழ்க பொன்னண்ணா வளம்பல நீடு கொண்டு !

வேலணையூர் பொன்னண்ணா வாழ்க ! வாழ்க !
வீழலாம் நாம் வாழட்டும் தமிழ் என்றே சொன்ன
சீலமிகு ஞானியரே ! ஈழ மண்ணில்
செந்தமிழர் குலம் மீட்க வந்த கவியே !
ஞாலமெலாம் புகழ் தமிழின் நரம்பே ! – மேலை
நாடான டென்மார்க் வாழ் தமிழ்த்தேன் கரும்பே-உங்கள்
கோலமிகு பவள விழா சிறப்புக் கொண்டு – வான்
புகழ் வளத்தோடு வாழ்க ! வாழ்கவென
வாழ்த்துகின்றேன் !

பார் புகழும் ஈழத்தின் வடக்கே சின்ன
பரப்பளவு கொண்ட ஊராய் வேலணையின்
பெருமைதனை உலகமெலாம் பரப்பி நிற்கும்
தாய் மண் போற்றும் பாசமதை சுமந்த வண்ணம்
தாய் மண்ணை தன் நாமம் சேர்த்துக் கொண்ட
புரட்சியொடு புதுமை செய்யும் கவிப்புயலே !
சீருடனே நீர் கொண்ட பெரும் புகழோ கோடி இன்னும்
புது சிந்தனைகள் பரப்பி நீடு வாழ்க ! வாழ்க !

– கோனேரி **பா. இராமசாமி,**
மக்கள் கலைக் கழகம், புதுச்சேரி.

### உங்கள் இல்லம் தேடி ஏழைதாசன் இதழ் வர...

| | |
|---|---|
| ஆண்டு கட்டணம் ரூ. 60/-<br>வாழ்நாள் கட்டணம் ரூ. 600/-<br>புரவலர் கட்டணம் ரூ. 1000/-<br>பணவிடை (M.O) அனுப்புங்களேன்..! | முகவரி :-<br>ஆசிரியர். **ஏழைதாசன்**<br>26, அப்பன்வயல் 8 ஆம் வீதி,<br>புதுக்கோட்டை - 622 002. |

## வாழ்த்து !

சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு. (தமிழ் மறை)

**கருத்து**

(தன்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு எவன் செயல்படுவானோ அவனை உலகம் போற்றும். வெற்றியும் வரவேற்கும் என்ற குறளின் வரிகளுக்கேற்ப)

பிழைக்கப் போன இடத்தில் தமிழைத் தழைக்க வைக்கும் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்களின் தமிழ்ப்பணி, தமிழர் பணி பாராட்டப்பட வேண்டிய அரும்பணியாகும். பலர் தாய் நாடு விட்டுப் போனதும், பெற்ற தாய் தந்தையரையே மறந்து வாழும் இன்றைய காலகட்டத்தில் அகவை எழுபதை நெருங்கிடும் வேளையிலும் தான் பிறந்த மண்ணை, மக்களை நினைத்து வாழும் மனிதராய் வாழும் பொன்னண்ணாவின் பணி பெரும் வியப்புக்குரியதே.

பாசமும், நேசமும் கைகோர்த்து பேருலா நடத்திய ஈழ வீதியிலே இன்று விடுதலை வீரர்களின் குருதியும், வீரத்தமிழரின் குருதியும், நிறைந்த செந்நீர்க் குளங்களாய் காண்கின்றேன். உலகத் தமிழர் வடிக்கும் கண்ணீர்க் கடலிலே ஆளும் வஞ்சக நரிகளின் இன வாதம் மிதக்கும் நாள் வெகு விரைவில். தமிழின் தமிழீழ தேசம் விடியும் நாள் வெகு விரைவில். அந்நாளே கவிஞரின் இதழ் புன்னகைப் பூக்கும் நாள். அதுவே இந்த வாசவனுக்கும் இதயம் இனிக்கும் நன்நாள். அதுவரை பொன்னண்ணா தம் பணியை தொடர தமிழன்னை துணை புரியட்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

கலைமாமணி' **டாக்டர் வாசவன்.**
தலைவர், உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம்,
சென்னை - 35.



படிப்பகம்

www.padippakam.com

# பேனாவே வாளாக மாறுகின்றது...

- செவாலியர், கலாநிதி **இளவாலை அமுதுப் புலவர்**, இலண்டன்.

வேலணையூர் யாழ்ப்பாணத் திருநகரை முத்த மிட்டபடி இருக்கும் திருமண். அந்த மண்ணில் சைவ சமய நெறியும், தமிழ் நெறியும் பண்பாடும் இதழ் விரித்து மணக்கும் வகையில் தொண்டாற்றும் பல அறிஞர்களும், பல்துறை சார்ந்த சான்றோரும் பிறந்து வளர்ந்து தமிழுக்கும் அவ்வூருக்கு அணி செய்து மகுடமிட்டுள்ளனர்.

அவ்வூர் மக்களின் கலப்படமற்ற அமைதி யான எளிமை கொண்ட வாழ்வும், பாரம்பரிய மான கலாச்சார கட்டுமானங்களும், தமிழ் அன்னையின் பூந்தோட்டமாக போற்றச் செய்தனர். இந்த பொன்னண்ணாவும், இந்த வேர் விலாசங்களில் தோன்றிய ஒரு மனித மாணிக்கம். அவரோடு தொடர்பு கொண்ட காலத் துணுக்கில், நான் அந்த மண்ணையும், மண் வாழ்ந்த மக்களையும் மாண்பையும் தமிழ்ப் பற்றினையும் கண்டு நான் மூக்கில் விரலை வைக்கின்றேன்.

சமய நெறியும் ; தமிழ்ப் பற்றும் கவிதை உள்ளமும் அவரோடு ஒட்டிப் பிறந்தவை எனலாம். தமிழ் அன்னை மீது அவர் கொண்ட காதலால் அவர் தன்னையே மாலையாக்கியவர் பொன்னண்ணா. அவர் தனது பிறந்த நாள் பவள விழாவை கொண்டாடும் வேளையில் அவர் தனது வாழ்க்கைச் சரிதத்தை நூலாக்கி எம் கரம் தருவது ஒரு சிறந்த பணியாகும்.

நம்மில் பலர் தங்களின் வாழ்க்கையை எழுதி மற்றவர் பார்வைக்கு வைப்பது புகழுக்கா கவும், பெருமைக்காகவும் என்ற நோக்கிலும் மற்றவர்கள் தம்மை குறை சொல்வார்கள் கேலி செய்வார்கள் என்ற சிந்தனையிலும், வாழ்க்கைச் சரிதத்தை எழுத விரும்பாது வாழ்க்கையில் ஒரு பெரிய தவறை செய்ததோடு தமது அடுத்த பரம்பரைக்கு தங்களையும் தங்கள் வாழ்க்கையின் அத்திவாரத்தையும் அழித்து விடுகின்றார்கள். பின் பிள்ளைகளே மற்றவர்களை தேடி அலையும், அறியும் நிலைக்கு தள்ளப்படும் நிலையை மாற்றி தன் வாழ்க்கையில் தான் நடந்த பாதையை, பயணத்தை பக்குவமாக ஞாபக சக்தியோடு பாதச் சுவடாக்கி வைப்பது பெரும் தமிழ்ப் பணியோடு முக்கியமான சேவையாகும். இதனால் நான் அவரை மனதார வாழ்த்துகின்றேன். இந்தப் பணியால் அவர் இறந்தும் நூறாண்டு வாழ்வார் என்பது நிச்சயமானது வாழ்த்துகின்றேன்.

பொன்னண்ணா தனது வாழ்க்கையில் கண்டு கேட்டு உற்று உணர்ந்த செய்திகளை பல கவிதைகளாக வடித்துள்ளார். அந்த அனுபவங்களே அவரது கவிதைகளுக்கு முதுகெலும்பாகி அவரை நிமிர்த்துகின்றது. வாசகரை அவரின் கவிதைத் தூறல்களில் ஊற வைக்கின்றது. எனவே, அந்த அனுபவ முத்திரை கருக்கள் நெஞ்சில் ஆணி அடித்தாற்போல் உட்கார்ந்து கொள்கின்றது.

கடந்த முப்பது ஆண்டுகளாக ஈழத்தமிழன் நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு அகதி நாமத்தை தாங்கிக் கொண்டு வாழ்ந்து வருகிறான் வெளி உலகில். அந்த வேதனையில் வாழ்ந்த பொன்னண்ணாவின் மடியில் இருந்த வேதனை நெருப்புப் பொறி நெஞ்சத்து நெருப்பாக கவிதை நூலாகி வெளிவந்துள்ளது. வரலாற்றில் புகழ்மிக்க வாழ்க்கை தமிழர் வாழ்க்கை. தமிழன் தன் மொழியைப் போற்றியது போல் உலக அந்தங்களில் வேறெவராவது தம் மொழியினை போற்றியதில்லை என்பது பலமுறை உலகை வலம் வந்த பேரறிஞர் தனி நாயக அடிகளார் கூற்று.

ஈழ நாட்டு மண்ணையும், மொழியையும் மரபையும் நேசித்து சமய நெறி, கல்வி, மனத் தூய்மை, செய்யும் தொழில், அன்பு நெறி, என்று உலகம் உவப்ப வாழ்ந்த ஒரு சமுதாயம். சிங்கள பௌத்த பொறிகளில் சிக்குண்டு கால காலமாக தவிக்கும் நிலை கண்டு கண் மூடிக் கொண்டு இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று காலம் கழிக்க ஒரு கவிதை உள்ளம் இடம் தருமா ? வெளிநாடு தேடி ஓடி வந்தாலும், மண்ணிலே தெறிக்கும் குருதித் துளிகள் கவிஞருக்கு கண்ணிலே தெறிக்கின்றன. உள்ளத்திலே உளி கொண்டு குத்துகின்றது. வாள் எடுக்க வழியில்லை : பேனாவே வாளாக மாறுகின்றது.

"ஒளி இழந்து, வழி இழந்து / உறங்கிடவும் இடம் இழந்து / தறிகெட்டு திரிகின்ற தமிழா" என்று நெருப்பில் தனலாய்க் கொட்டும் பொன்னண்ணா எழுத்தில் அக்கினி பொங்கி குமுறுகின்றார். அலை மோத வேண்டாமென்று கடலுக்கு வேலி போட முடியுமா ? என்று அவர் கேட்கும் கேள்வி உலக மாதாவின் செவிகளுக்கு எட்டியதாக இன்னும் தெரியவில்லை. சிங்கள இனவாத அரசியல் நரிகளுக்கு முன்னே நீட்ட வேண்டிய இந்த சிந்தனைச் சிதறல்களே இந்த நெஞ்சத்து நெருப்பு. கவிஞர் பொன்னண்ணா தன் உணர்வலைகளை கிண்டிக்கிளறி அதில் கிடக்கும் அனற் பொறிகளை ஊதி நெருப்பு சுவாலையாக்கி பேனா முனையால் எரிய வைக்கின்றார்.

தமிழ்க் கவிதைத் துறையில் மரபுக் கவிதைக்கு யாப்பு முறையுண்டு. சீர்களை எடுத்தால் நற்சீர், ஆறு சீர், எண் சீர் பலர் அறிந்தவை. இவை மாத்திரமின்றி வக்குப்பாட்டு வர்ணங்கள் சிந்து என்பனவும் புதிய சீரமைப்பாக நேர்ந்து கொண்டவை. சித்தர்களும் இதை விட்டு வைக்கவில்லை பொன்னண்ணா அந்த மரபு வழியைத் தாண்டி உள்ளத்து உணர்வு நிலைக்கு சென்றுள்ளார். வீடு பற்றி எரியும் போது நமக்கு வேறென்ன வேலை என்று குமுறி எழுகின்றார்.

"எம்மை சுதந்திரமாய் வாழவிட்டிருந்தால்.... இடிபட்டு, அடிபட்டு, உதைபட்டு / வெடிபட்டு, சாகும் நிலைவிட்டு / ஒரு சொட்டு கண்ணீர்தனை விட்டு / குருதி ஓடாமல் தானும் தடைபட்டு / நாடாளும் உன்னுள்ள பயம் விட்டு / நடந்திருக்கும் நல்லாட்சி நாட்டில்" சிந்தனையற்ற செயலாற்றிய சந்திரா அம்மாவின் வீட்டுக் கதவை தடதடவென தட்டுகிறார் கவிதையில் இங்கே. அவரின் கவிதை வரிகளின் வீச்சு வெளிச்சம் போட்டு காட்டுகிறது. அவரின் நெஞ்சத்து துணிவை கண்டு நெஞ்சு சிலிர்க்கிறது. அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல மனித மாணிக்கம். நான் மட்டுமல்ல பலர் சொல்லக் கேட்டுள்ளேன். நானும் மனதார மனம் திறந்து வாழ்த்துகின்றேன். அவரின் வாழ்க்கை வரலாற்று மலர் சிறப்புடன் வெளிவர மக்கள் பயன்பெற இன்னும் பல நூல்களை வெளியிட வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

# சொந்த தாய்மண்ணுக்கு மகுடமிடும் ஓர் இலக்கியவாதி வேலணையூர் பொன்னண்ணா !

இலங்கை மண்ணை விட்டு பல ஆயிரம் மைல்களைக் கடந்து வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்தாலும் தாய் மண்ணை மறந்து விடாமல் தன் பெயரோடு தாய்மண்ணின் பெயரையும் சுமந்தபடி தன் எழுத்துத் திறனால் தாய் மண்ணுக்கு மகுடமிடும் ஓர் இலக்கிய வாதியாக வேலணையூர் பொன்னண்ணா விளங்குகிறார்.

1939 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆம் நாள் வேலணை கிழக்கு மூன்றாம் வட்டாரத்தில் தவிடு தின்னி பகுதியில் ஆறுமுகம் பொன்னையா வுக்கும், பொன்னம்மாவுக்கும் கனிஸ்ட புத்திரனாக பிறந்த இவருக்கு தந்தை வைத்த பெயர் தியாகராசா. உறவுகள் அழைத்த பெயர் மாசு மறு இல்லா மணி மாசிலாமணி. அரசியல் பொதுப் பணியின் இப்போ இலக்கியப் பணியில் "கவிதா வாரிதி" வேலணையூர் பொன்னண்ணா.

1944 இல் வங்களாவடி சரஸ்வதி பாடசாலையில் ஆரம்பக் கல்விக்காக இணைந்து அங்கு இரண்டு ஆண்டுகள் படித்த இவர், கிழக்கு கலவன் பாடசாலைக்கு (தற்போது வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) மாற்றப்பட்டார். மேற்படி பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்து 1951 ஆம் ஆண்டு வேலணை மத்திய கல்லூரியில் சேர்ந்தார்.

வாழ்க்கையில் வாழ்ந்து காட்டனும் என்ற மனோதிடம் அவரைப் பின்னாள் கிராமத்தின் சமூக சேவகனாக, அரசியல் வாதியாக, மேடைப் பேச்சாளனாக, நாடக நடிகனாக, பத்திரிகை எழுத்தாளனாக, சமூகம் இவரை பல கோணங்களில் இனம் கண்டு வரவேற்று நின்றது. அவரும் தனது மண்ணை விட்டு பிரியும் வரை தன் பணி களில் மக்களுக்காக மக்களின் பலத்தோடு பெரும் பணியாற்றினார். 1981 ஆம் ஆண்டு ஆடி மாதம் வெளிநாடு புறப்பட்ட இவர் தனது புலம் பெயர் வாழ்க்கையிலும் பெரும் மக்கள் பணி செய்துள்ளார். அவரின் கவிதைத் தொகுப்பில் இருந்து ஒரு கவிதை.

"ஆயிரம் பழங்களை பிழிந்து
சாறாக்கி குடித்து விட்டேன்
ஆனாலும்... என் தாய் மண்
சாட்டித் தண்ணி போல்
தாகமதைத் தீர்க்கவில்லையே!

இவர் புலம்பெயர் வாழ்க்கையிலும் டெனீஸ் – தமிழ் அமைப்பு, பாரீஸ் – உலகத் தமிழர் பேரமைப்பு, தமிழகம் – உலகத் தமிழ் எழுத்தாளர் மன்றம், டென்மார்க் தமிழ் எழுத்தாளர் பேரவை, ஜேர்மனி – சர்வதேச புலம் பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகம் – மலேசியா போன்ற அமைப்புகளின் உறுப்பி னராகவும், நிர்வாகியாகவும் இருந்து தமிழ்ப் பணியை செய்து வருகின்றார். இவர் தனது சொந்த வெளியீடாக பல கவிதை நூல் களையும் பக்தி நூல்களையும் ஒரு தாய் மண் ஆவணத் திரட்டாக அருளமுதம் நூலையும் வெளியீடு செய்துள்ளார். அரசியல் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ள இவர் பட்டிமன்றம், கவியரங்கம் போன்றவற்றை தலைமை ஏற்று நடத்தி வருகிறார்.

1993 இல் நிலமாகி – கவிதை, 1995 இல் வெந்தவனம் – கவிதை, 1997 இல் அபிராமி அம்மன் பஜனைப் பாடல், 1999 இல் பிள்ளையார் பக்திப் பஜனைப் பாடல், 2000 இல் பச்சை இறகு – கவிதை, 2003 இல் உளிகள் – கவிதை, 2005 இல் ஆவணத் திரட்டு அருளமுதம், 2008 இல் நெஞ்சத்து நெருப்பு – கவிதை இப்படி எட்டு நூல்களை எழுதி விழா நடத்தி வெளியி ட்டுள்ளார்.

இவரது இந்த செயற்பாடுகளுக்கு எல்லாம் சக்தி வழங்கியது அந்த முத்து மாரி அம்பாளும், அவரின் மனைவியுமே காரணம் என்று பலமுறை கூறியுள்ளார். இன்னமும் ஒரு நூல் வெளியிடும் வேலையை தொடங்கியுள்ளார்.

✪ தினக்குரல், இலங்கை.
(10.09.2006 ஞாயிறு)

## ஒரு சிறு வருத்தம்

ஈழ மண்ணின் நிலையும், தமிழ் இனக் கொலையும் வாசகர்கள் அறிந்ததே. உலகு வாழ் தமிழ் நெஞ்சங்கள் தீயில் விழுந்த புழுவாய்த் துடிக்கிறார்கள். உலகெங்கும் போராட்டம், ஊர்வலம், உண்ணாவிரதம், கண்ணீர் அஞ்சலி... இத்தகைய தர்ம சங்கடமான காலகட்டத்தில் நமக்கு பத்தாண்டுகளாக ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்களின் பவள விழா (26.5.2009) வருவதை முன்னிட்டு இந்த சிறப்பு இதழை வெளியிடுகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com



மின்-பா இயற்றும் பொன்னண்ணா தன் மனைவி திருமதி. பொன்மணி அவர்களுடன்.

## வீழ்வது நாமாகவு
## வாழ்வது தமிழா



டென்மார்க்கில் பிறந்த நாளை கேக்
பொன்னண்ணா மற்றும் மகன்கள், ப

## தமிழால் ஒன்றிணைவோம்!
## தமிழர்க் கோர் நாடு செய்வோம்!

# பொன்னண்



பகுத்தறிவுப் பாடல்களால் பார் போற்றும் நிலைக்கு உயர்ந்த கவிஞர் அறிவுமதி அவர்களுடன்....





படிப்பகம்

www.padippakam.com

இருக்கலாம் !
...வே இருக்கட்டும் !




பாரீசில் நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா பேசுகிறார்.



...டிக் கொண்டாடும் கவிஞர் வேலணையூர் ...ள் புடை சூழ உற்சாகக் காட்சி.

## உண்மையே என் மொழி !
## ஒற்றுமையே என் வழி !

...ா சில படப்பதிவுகள்



பெரியார் ஈ.வே.ரா. படத்தை பல கோணங்களில் கோட்டோவியமாகத் தீட்டிய ஓவியக் கலைஞர் புகழேந்தி அவர்களுடன்.



கனடா கவிஞர் க[illegible] கந்தவனம் அவர்களுடன் பொற்கால அதிபர் பொன். தியாகராசா தெல்லிப்பிள்ளை மகாசன கல்வி அதிபர் பொன். கனகசபாபதி அவர்களுடன்.



படிப்பகம்

www.padippakam.com


## வசந்தா பதிப்பகம் வாழ்த்துகிறது !

டென்மார்க்கில் வாழும் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் வெற்றிகளைக் குவிக்க அவர்தம் பவள விழாவில் வசந்தா பதிப்பகம் வாழ்த்தி மகிழ்கிறது.

டென்மார்க்கில் செந்தமிழர் பொன்னண்ணா வாழிய !
இன்னுமொரு நூற்றாண்டை ஏற்று !

**ஆலந்தூர் மோகனரங்கன் கவிதைகள்**
**பக்கம் : 256 விலை ரூ. 110-00**
**ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய கவிதை நூல்**

எழுந்து நின்று குதிக்காமல்
எழுத்து நடனம் ஆடுகிறேன் !
கழுத்தை நீட்டி முகம்காட்டிக்
கண்ணால் பேச விரும்பாமல்
பழுத்த தமிழில் பேசுவதால்
பரிதி ஆகிப் பரவுகிறேன் !
விழித்த தோழர் வாருங்கள் !
விருந்தாய்க் கவிதை வழங்குகிறேன் !
பிழிந்த தேனை எடுக்காமல்
பிளந்த கனியை இணைக்காமல்
வழிந்த கரும்பின் சாற்றைப்போய்
வாவா என்றே அழைக்காமல்
பொழிந்த மழையைச் சேர்க்காமல்
பொன்னைக் கலந்து பேசாமல்
மொழிந்த கவிதைத் தமிழாலே
முத்தம் அளிக்க வருகின்றேன் !
- ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

வடலூராரும் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளாரும் ஆறுமுக நாவலரும் பரிதிமாற் கலைஞரும் மாக்கவி பாரதியாரும் சோமசுந்தர பாரதியாரும் மறைமலையடிகளும் திரு.வி.க.வும் பாவேந்தர் பாரதிதாசனும் குத்தூசி குருசாமியும், அப்பாத்துரையாரும், மயிலை சீனி. வேங்கடசாமியும் நாமக்கல் கவிஞரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் நூல் வடிவில் அமர்ந்து எங்கள் பதிப்பகத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் பார்க்க வருவீர்களா ?

தொடர்புக்கு :-
முனைவர் **மோ. பாட்டழகன்,**
**வசந்தா பதிப்பகம்,**
புதிய எண். 26, குறுக்குத் தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
**22530954, 22533667, 93804 17307**




படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய முனிவர் இதயத்திலிருந்து...

அகதியாகி இடர்படவா வெளிநாடு ஓடி வந்தேன் ? எண்ணித்தான் பார்க்கின்றேன் என் தாய்மண் காட்சிகளை. எண்ணித் துடிக்கின்றேன். எப்போதான் தாய் மண் மீளுமென்று - என அன்னிய நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் இதயத்தில் துள்ளிக் கொதிக்கும் ஏக்கத்தை பொன்னண்ணாவின் கவிதைகளும், ஒலித்து நிற்கின்றன. கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா தமிழ் இனம், தமிழ்மொழி, தாய் மண் பற்று மிகுதியாக உடையவர். மனித நேயம் வளர்ப்பவர். மனிதருக்கு தீமையும், கொடுமையும் விளைவிக்கின்ற ஆணவமும், அகங்காரமும் கொண்டு நாசகார செயல்புரிகின்ற வெறியர்களை வெறுப்பவர். அன்பையும், அமைதியையும் உலக மக்களின் அமைதியான, சந்தோசமான, வளமான வாழ்வை விளைவிக்க வேண்டும் என்று நினைப்பவர். அவரின் இந்த வளமான, பண்பான சிந்தனைகளை அவரின் கவிதைகள் தெட்ட தெளிவாக சொல்லி நிற்கின்றன.

அது அதிகார ஆணவ இதயத்தோடு பிறநாடுகளின் மீது போர் தொடுத்து அப்பாவி மக்களை பலிக்கடாவாக்கும் அமெரிக்கா முதல் பேரினவாத அரசியல் வெறியால் இனம், மதம் பேசி மக்களை பலிக்கடவாக்கும் வேறு சில நாடுகளையும் அந்த நாடுகளை அரசோச்சும் அதிகார வெறியர்களின் மீதும் கவிஞர் பொன்னண்ணா பயங்கர கோபக்காரராகி கவிதைகளின் ஊடாக அவர்களை கசக்கிப் பிழிகிறார். இரு நாடுகளுக்கிடையில் சண்டையை தொடரும் போது இரு இனங்களுக்கிடையிலும் அங்கு மடிவது ஆள்வோனோ, ஆள்வோரின் எடுபிடிகளோ அல்ல. சாதாரண மக்களும், படைகளுமே என்பதை வெள்ளிடை மலையாக கவிதைகளில் சுட்டிக்காட்டி எழுதும் துணிவுக்கு சொந்தக்காரணாகின்றார் கவிஞர் பொன்னண்ணா அவர்கள்.

இந்தியாவையும், இங்கே ஆள்வோரையும் பார்த்து கேள்விக்கணை தொடுக்கிறார் பொன்னண்ணா கவிதை வரிகளால். உலகுக்கு போதனை செய்திடும் காந்தியர் ஒளி வீசிய நாட்டில், அண்ணல் காந்தியர் பிறந்திட்ட மண்ணில். இன்று மதத்தின் பெயராலும் அரசியலின் பெயராலும் நடத்தப்படுகின்ற கொடுமைகளும் அப்பாவி மக்கள் அனுபவிக்க நேரிடும் அவலங்களும், தமிழின சீரழிவுகளும் கவிஞரின் உள்ளத்தின் வேதனைத் தீயை எழுப்புகின்றன. அந்த உணர்வோடு காந்தியம் மணக்கிறதா என்று கவிதையில் கேள்வி எழுப்பி உள்ளார். அது அவரின் துணிச்சலான பாச்சலை காட்டுகின்றது.

போரில் மடிந்த மகனை நினைத்து அழும் வீரத்தாயின் உணர்வலைகள். மண்ணை விட்டகன்ற பேரனுக்கு பாட்டி எழுதிய கடிதம். எண்ணிப் பார்க்கின்றேன் என்தாய் மண்ணை என்ற கவிதையில் வரும் வரிகள் பல அத்தனையும் ஒட்டுமொத்தமாக கவிஞர் டென்மார்க்கில் வாழ்கின்றாரா ? இல்லை தாய் மண்ணில் வாழ்கின்றாரா ? என்ற திகைப்பை வாசகருக்கு ஏற்படுத்துவதோடு அவரின் தாய் மண் நினைப்பு மேலோங்கி நிற்கின்றது. இப்படி இனத்துக்காக, இனத்தின் விடியலுக்காக நெஞ்சில் கனலும் உணர்வுகளை கவிதைகளாக்கி, வாசகரை உணர்வு கொள்ள வைக்கின்றார். அகவை எழுபதை எட்டிப் பார்க்கும் ஒரு இளைஞராய் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள். அவரின் தமிழ்ப்பணி இன்னும் பலப்பல வெளிவந்து தமிழரை உணர்வூட்டி தமிழரை தலை நிமிர வைக்க வேண்டுமென ஆண்டவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

- முதுபெரும் எழுத்தாளர் அமரர்

**வல்லிக்கண்ணன்**, சென்னை.

## வேலணையூர் பொன்னண்ணா !



ஈழப் பறவை இருக்க இடமில்லை !
வாழப் பறந்ததே டென்மார்க்கில் ! - ஆழக்
கடலே ! துயரால் கடல்கொண்ட நாங்கள்
இடரால் விழுந்தோமே இன்று !

--0--

டென்மார்க் தமிழன் திருக்கையால் வையத்தின்
பொன்மார்பில் சூட்டுவான் பூமாலை ! - நன்றாகும்
செந்தமிழர் சீறிவந்தால் தீயவர் தோல்வியால்
பந்தென ஓடுவார் பார்த்து !

--0--

வேலணையூர் பொன்னண்ணா ! வெற்றிவரும் நல்லண்ணா !
காலடியில் தேயும் கடுந்துயரம் - நாலடியில்
நானெழுதும் வெண்பாவால் நாளை வரும் இன்பத்தைத்
தேனொழுகச் சொல்வேன் தெளிந்து !

--0--

முத்தமிழ்க் கவிஞர்
முனைவர். **ஆலந்தூர் கோ. மோகனரங்கன்,**
ஆதம்பாக்கம், சென்னை - 88.



படிப்பகம்

www.padippakam.com

# மதுரை கவிஞர் சங்கத் தலைவரின் வாழ்த்து !

கடுகளவு சிறிதாக இருந்தாலும் உணர்வுக்கு ருசியேற்றும் கவிதைகள். வடிவம் சிறிதாக இருந்தாலும் சிந்தனைச் சிதறல்கள் சிறகடிக்கும் ஒன்றே முக்கால் அடிகள் தான் உலகப் பொது மறையான உலக மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள். அது உலகத் தமிழர்களுக்கும் புலம் பெயர் தமிழர்களுக்கும் அது ஆற்றி வரும் தொண்டு அளப்பரியது.

இன உணர்வுடன் இலக்கியச் சேவை செய்து வருபவர்கள் பலர். அவர்களில் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் புலம் பெயர் மண்ணொன்றில் மிகவும் முன்னணியில் நிற்கின்றார் எனலாம். புலம் பெயர் வாழ்க்கையில் பலர் தான், தன் குடும்பம் என்று வாழ்ந்து வரும் இக்கால கட்டத்தில் தன் குடும்பம் என்று சுருங்கி விடாமல் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை என்று தனது அகவை எழுபதை எட்டும் நிலையிலும் உணர்வோடு இளம் குருதி சிலிர்த்தெழும் உணர்வலையில் பல கவிதைகள் எழுதி வருகின்றார்.

உதாரணமாக..."ஏழைக்குமரியின் அழுக்குப் பாவாடை / கிழிசல் ஓட்டை / பணக்காரனுக்கு வானத்து நட்சத்திரம் !" இந்த இரண்டாயிரத்து ஆறிலும் தொடர்வதையும் ஏழ்மையின் கொடுமையையும் பணக்காரனின் காம வக்கிர புத்தியையும், தோலுரித்து கவிதை வரிகளால் சவுக்கடி தருகின்றார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் பொன்னண்ணாவின் ஒரு கவிதையை மட்டும் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். உணர்வலைகளின் உணர்வோடு மனித நேயத்தையும், வலியுறுத்தும் வகையில் கவிதைகளை புடம் போட்டு செதுக்கி செப்பனிட்டு இருக்கிறார் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா அவர்கள்.

சிலையில் உள்ள கலை அம்சம் அவரின் கவிதைகளிலும் என்னால் காண முடிகின்றது. போரில்லா உலகம் வேண்டும். தமிழர்களின் இன்னலுற்ற வாழ்வில் விடியல் வேண்டும். இவர் உள்ளத்து உணர்வோடு உரக்க குரல் கொடுத்துள்ளார். கவிதைகளை படித்து முடித்த பின்னும் வாசகன் தனது சிந்தனையில் அசை போடும் வண்ணம் அற்புதமான கவிதைகளையும் கவிதைகள் கொண்ட கருக்களையும் திரட்டித் தந்திருக்கிறார் கவிஞர் பொன்னண்ணா அவர்கள். போலி வேசமிடும் இனவெறியர்களின் மூடு திரையை பேனாக்கத்திக் கொண்டு கிழித்தெறிந் திருக்கிறார் நெஞ்சத்து துணிவோடு. பொன்னண்ணா படைத்த கவிதைகளை நானும் படித்து புசித்து, பொன்ன ண்ணா உங்கள் கவிதை எல்லாம் பொன் - அண்ணா என அவரை வாழ்த்துவதோடு அவரின் தமிழ்ப்பணி மீண்டும் மீண்டும் தொடர உலகை வலம் வர வேண்டுமென மனதார வாழ்த்து கின்றேன்.

**- இரா. இரவி,**
கவிஞர் சங்கத் தலைவர், மதுரை.

பனிமலை தாண்டிய கவிஞனுக்கு
பவளவிழா வாழ்த்துக்களோடு
சூட்டிய ஒரு கவிமாலை !

**பொன்னண்ணாயினை பொன்மணி**
**நல்லற வாழ்வினிக்க - முற்**
**தவப் பயனாலீன்ற கவிகள் ஐந்து !**
**கவிஞானம் பெற்று தந்த நூல் பத்து**
**செவ்வனே வாழ்ந்து புகழெட்ட**
**எட்டி விட்டாயய்யா ... அகவை எழுபதை !**
**இன்னமுமினிதே பல நூறாண்டு**
**வாழ்க ! வளமுடன் சேர்க்க வளம் !**

**- இனுவையூர் சக்திதாசன்,**
டென்மார்க்.

சித்திரை 1இல் இனிய உதயம்
ஏழைதாசன் கணினி அச்சகம்
# 94 42 77 68 68

www.padippakam.com

## மணி வயல்கள் தழைக்கும் !

● டென்மார்க்
கண்ணியமே !
ஈழத்துப்
புண்ணியமே !
வேலணையூர்
பொன்னண்ணா !

● புடம் போட்ட
உன் கவிதை
ஈழ மண்ணில்
வீரத்தை
நடமாடச் செய்யும்
இறுதியில் – தமிழ்க்
கனலே வெல்லும் !

(வேறு)

● தாலாட்டும்
தமிழச்சி
மார்பில்
வேல் பாய்ந்து
உயிர் மாய்த்திருந்தால்
சகித்திருப்போம்.

● சண்டாளன்
பால் அருந்தும்
பச்சிளம் குழந்தைகளை
தட்சணையாய்த்
தீயில் எரிக்கின்றான் !

● காற்றோடு
கரைந்த ஆத்மாக்கள்
நாற்றென
நெல் வயலில்
முளைக்கும்.
விரைவில்
மணி வயல்கள்
தழைக்கும் !

**- தாரா,**
பழைய சூரமங்கலம்,

ஆண்டுக் கட்டணம் ரூ.60/-
புதுப்பித்து விட்டீர்களா !

## பொன்னண்ணா !

அண்ணலின்
அன்னைத் தமிழில்
எழுச்சிமிகு
கவிதைகளால்
இலட்சியமிக்க
உணர்வு உள்ளத்தினுள்
உயர்ந்தோங்க வைத்து
தமிழனின்
இதயத்தில் வாழ்கிறார் !

**- நல. ஞானபண்டிதன்,**
திருப்புவனம்புதூர்.
சிவகங்கை.

## குறுந்தகவல் (SMS) வாழ்த்து !

I

எந்நாளும்
தமிழ் மணக்கும்
உன் சொல்லில்
என் அண்ணா !

மண்ணாளும்
திறம் மிக்க
கவிதைகளைத் தரும் அண்ணா !

சொன்னாலும்
வாய் இனிக்கும்
வேலணையூர் பொன்னண்ணா !

விண்ணாளும் புகழோடு
பல்லாண்டு வாழ்ந்திடண்ணா !

II

உன் பேச்சின் இனிமை கண்டு
குயிலும் பாடம் படிக்கட்டும்.

உன் கவிதைச் சந்தம் கேட்டு
மயிலும் ஆடி முடிக்கட்டும்.

உன் துள்ளல் நடை கண்டு
கயலும் துள்ளல் நிறுத்தட்டும்.

உன் கவிதைச் சீற்றம் கண்டு
புயலும் ஓய்வு எடுக்கட்டும்.

பவள விழா நாயகரே,
பல்லாண்டு வாழ்கவென்று
பரணி புகழ் தமிழினம்
பல்லாண்டு பாடட்டும் !

III

ஓங்கு புகழ் தமிழ் உலகம்
வாங்கி வந்த வரமே,
தேங்கு (ம்) அணை நீரைப் போல்
கவிதை தரும் கரமே,
வாங்கும் என் ஆயுள் கூட
உனக்கான உரமே,
ஏங்கு தமிழ் பறவைக்கெல்லாம்
நீ ஆலமரமே,
வாழ்க நீ பல்லாண்டு
பவள விழாதான் கண்டு !

**– எம். வேல்முருகன்,**
மதுரை.

**இதழை இலவசமாகப் பெறுவது ஏழைதாசன் வளர்ச்சியை பாதிக்கும்.**





படிப்பகம்

## ஒரே சிற்றிதழ் !

அடடா...! ஒரு சிற்றிதழில் எத்தனை எத்தனைச் செய்திகள் : கவிதைகள்... ஏழைதாசனுக்கு நிகர் ஏழைதாசன் தான். தமிழகத்தில் எனக்குத் தெரிந்தவரை இலங்கைக் கண்டனச் சிறப்பிதழ் வெளியிட்டு தமிழர்தம் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய வீரமா மனிதர் விஜயகுமார் மட்டுமே. அவர் தமிழ் இனத் தலைமகனாய் இன்று உயர்ந்து நிற்கிறார். பாராட்டுகிறேன்.

– பாவலர். **கருமலைப் பழம்நீ,**
வியாசர்பாடி, சென்னை.

## கவிதைச் செல்வன் !

ஏழைதாசனையும், இனியா குறுஞ்செய்தி இதழையும் படித்து மகிழ்கிறேன். செறிவான கவிதைகளால் ஏழைதாசனை கவிதைச் செல்வனாய் உயர்த்தி புகழ் பரப்பும் உங்களைப் பாராட்டுகிறேன்.

– **வி. தங்கராஜ்,** செயலாளர்,
திருவள்ளுவர் குருகுலம், காஞ்சிபுரம்.

## கண்டனக் குரல் !

இலங்கையில் நிகழும் இனப் படுகொலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் சிறப்பிதழாக மார்ச் இதழ் வெளிவந்துள்ளது. இவ்விதழில் இடம் பெற்ற படைப்புகள் அனைத்தும் தீப்பிழம்பு களாகத் திகழ்கின்றன. மட்டுவில் ஞானக்குமரன், பத்மாவதி சீவரட்ணம் ஆகியோரின் மடல்கள் நெஞ்சைப் பிழிவதாக உள்ளது. உலக நாடு களின் கண்டனத்தையும் பொருட்படுத்தாமல் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் இராசபட்சேவுக்கு அழிவு வெகுதூரத்தில் இல்லை. செயலற்றுக் கிடக்கும் ஐ.நா. சபைக்கு உலகெங்கும் வாழும் தமிழர்களின் கண்டனக் குரல் எதிரொலிக்கட்டும். ஏழைதாசனின் இச்சீரிய பணியை பாராட்டுகிறேன்.

– கவிஞர். **மு. வாணி,** தலைமை ஆசிரியர்,
ஓய்வு, ஆற்காடு.

## சீனாவில் தமிழ் !

அன்புடையீர் !, நீங்கள் அனுப்பிய 2 இதழ்கள் கிடைத்தன. மிக்க நன்றி.

– **மீனா,** தமிழ்ப் பிரிவு, சீனவானொலி
நிலையம், சீனா.

## கண்டன இதழுக்கு நன்றி !

அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய விஜயகுமார் அவர்களுக்கு, வணக்கங்கள். இலங்கைக் கண்டனச் சிறப்பிதழில் ஈழத் தமிழருக்காக உலகத் தமிழர்கள் சிந்திய கண்ணீர் வரிகளை வாசித்தேன். அல்லல்படும் இந்த மக்களுக்காக சிறப்பிதழைத் தயாரித்த ஏழைதாசன் விஜயகுமாருக்கு எங்களது பணிவான நன்றிகள்.

– **மட்டுவில் ஞானக்குமாரன்,**
இலங்கை.

## இணைக்கும் பாலம் !

வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் எழுத்தும் சூரிய கதிர்போல் என்றென்றும் பிரகாசிக்க வேண்டுமென வாழ்த்துவோம். நம்மை ஆழி பிரித்தாலும் உங்கள் ஒவ்வொரு வரியும் இணைக்கும் பாலமாகும்.

– **உ.ச. அருணாசலம்,**
மாதவரம் பால்பண்ணை, சென்னை.

## உளிப்பாக்கள் !

உடற் குறையுள்ள நிலையிலும் தமிழார்வமும், தொண்டுள்ளமும் கொண்டு தமிழ் அமுதம் எனும் இதழ் நடத்துவது அரும்பெரும் சாதனை. முனைவர் பொன்னியின் செல்வனைப் போன்று தமிழகத்து கவிஞர் எல்லோரும் 'அறம்' வைத்துப் பாடி கொடிய அரக்கன் இராசபக்சேவை அழிக்க முற்பட வேண்டும். துளிப்பாக்கள் சொட்டு சொட்டாய் இருப்பினும் தேள் கொடுக்காய்க் கொட்டுகின்றன. துளியையும், உளியாக்கி எதிரியைத் தகர்ப்பதாய் இருந்தன. எஸ்.எஸ்.வேலு ஈழத்து வலி நெஞ்சில் நெருப் பள்ளிக் கொட்டி சுட்டது.

– புலவர். **ந. ஞானசேகரன்,**
திருலோக்கி, தஞ்சாவூர்.

## அருமருந்து !

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரலாக ஓங்கி ஒலித்து வரும் ஏழைதாசன் மாந்த உரிமை களுக்காக முன்னோடியாக நிற்கும் போராளியாகி வருகிறது. மாற்றுத் திறனாளர் ஆல்டிரின் பிரிட்டோ கட்டுரை தன்னம்பிக்கை வேருக்கு நீர் பாய்ச்சுவதாக அமைந்திருந்தது. ஏழைதாசன் புதிய படைப்பாளர்கள் பங்கேற்கும் 'மக்கள் மேடை' யாக களம் அமைத்துள்ளீர். ஆலந்தூர் மோகனரங்கன் கவிதை அவர் தம் முத்திரைவெளிப்பாடக மிளிர்ந்தது. இலங்கைக் கண்டனச் சிறப்பிதழ் முழுவதும் கவிதை வரிகளால் தட்டியெழுப்பி உணர்வு பெறச் செய்யும் அருமருந்து. ஈழ அன்பரின் மடல் படித்து வருந்தினேன்.

– **சு. வேல்மணி,** தாரமங்கலம், சேலம்.

ஏப்ரல் ஏழைதாசனில் உங்களின் இலங்கைக் கண்டன அய்க்கூக்கள் படித்தேன். நன்று.
– **சு. கணேஷ்குமார்,** அம்பத்தூர்.

ஏழைதாசன் கிடைத்தது. நன்றி.
– **அ. அப்துல் காதர்,** வண்ணாரப்பேட்டை.

உங்கள் புத்தகம் வாசித்தேன். அருமை.
– **தமிழ் அரசு,** காஞ்சிபுரம்.

தங்களின் ஏழைதாசன் சிற்றிதழ் இன்று கிடைக்கப் பெற்றேன். நன்றி.
– **கா. இராமலிங்கம்,** விழுப்புரம்.



✱ கவிஞர். **பொன்னண்ணா** சிறப்பிதழ்




அக்குபஞ்சர்,
# மாற்றுமுறை மருத்துவப்பயிற்சி

**1 வருடம் டிப்ளமோ பயிற்சி, ரெகுலர் மற்றும் தொலை தொடர்புப் பயிற்சி**

இடம்:
உங்கள் தாய் வீடாகிய
**அப்துல்லா மிஷன் மருத்துவமனை, காரைக்குடி.**

**ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் காண்டாக்ட் செமினார் வகுப்புகள் மற்றும் நேரடிப் பயிற்சி காரைக்குடியில் நடத்தப்படுகிறது.**

அக்குபஞ்சர், காந்த சிகிச்சை, கொரியன் சுஜோக் அக்குபஞ்சர், டி-அடிக்ஷன், எலக்ட்ரோ ஹோமியோபதி, மலர் மருத்துவம், ஹிப்னோ யோகா, ப்ராணிக் சிகிச்சை, ரெய்கி அக்குபஞ்சர் சிகிச்சை, யோகா, தியானம், ரெஃப்லக்சாலஜி, நாடி பரிசோதனை அக்கு டச் போன்ற பலதரப்பட்ட சிகிச்சை முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

## அக்குபஞ்சர் நிபுணர் பயிற்சி

டிப்ளமோ பயிற்சி பெற்றவர்கள் இலங்கை பல்கலைக்கழக மேற்படிப்பு பெறவும், பல்கலைக்கழக சான்று பெறவும் பயிற்சி அளிக்கப்படும்.

*ப்ராஸ்பெக்டஸ், கட்டணம் மற்றும் இதர அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

## அப்துல்லா மிஷன் மருத்துவமனை

பெரியார் சிலை அருகில், காரைக்குடி – 630 001.
CELL : 98424 – 23082 PH : 04565 – 233735, 238082

சென்னை, கோவை, மதுரை, தர்மபுரி, காரைக்கால், கும்பகோணம், செங்கல்பட்டு, காரைக்குடி ஆகிய இடங்களில் வெவ்வேறு தேதிகளில் செமினார் வகுப்புகள் நடைபெறுகிறது.

**போன் எண்கள் :**
சென்னை (வேளச்சேரி): 044-22435471 சென்னை (தாம்பரம்) : 044-22273786, 94441 – 80416, 92821 – 11618. கோவை : 0422 – 2570210 . மதுரை : 94434 – 08460, 0452 – 5536201. தர்மபுரி : 04342 – 570749, 94435 – 09839 காரைக்கால் : 94430 71284. கும்பகோணம் : 0435 – 2442259. 94437 – 43259 செங்கல்பட்டு : 044 – 27426163.

www.padippakam.com

EALAIDHASON *TAMIL MONTHLY * R.N.I. Regd No. 55308 / 92
R.C. No. 2449/98 * Postal Registered No. TN/PDK/03/09-11



துருவ நட்சத்திரம்!

- முதுமைப் பருவம் ;
  எழுச்சி உள்ளம் !
- பனிமலை நாட்டின்
  நெஞ்சத்து நெருப்பு !
- அய்ரோப்பா கண்டத்தின்
  அக்னிக் காற்று !
- வெள்ளை மாளிகையின்
  வேடத்தைக் கிழித்தவர் !
  அய்க்கிய மன்றத்தின்
  அநீதியை எதிர்த்தவர் !
- அயலக வாழ்க்கை
  தாயக கோரிக்கை !
- இனமானக் கவிஞர் !
  தன்மான அறிஞர் !
- படித்தால் அதிர வைக்கும்
  மின்-பா படைப்பாளி !
- பாட்டாளி மக்களின்
  கண்ணீர்த் துடைப்பாளி !
- தமிழ் மொழி இலக்கியவாதி !
  தமிழ் இன இலட்சியவாதி !
- புலரும் தாயகத்தின்
  புதிய முத்துச்சரம் !
  மலரும் தமிழீழத்தின்
  துருவ நட்சத்திரம் !

'ஏழைதாசன்' விஜயகுமார், புதுக்கோட்டை - 2.

பெறுநர் திரு.

Published Printed and Owned by S. Vijayakumar. Printed at Ealaidhason Computer Printers, Pudukkottai - 2. Published from 26, Adappanvayal 8th Street, PUDUKKOTAI - 622 002, Tamil Nadu, INDIA. Editor: **S. VIJAYAKUMAR** B.A.,
**Cell No. : 0091-94 42 77 68 68**

படிப்பகம்